3rd September 1959]

SRI V. SUBBIAH : ஜமீந்தாரி பாரஸ்டுகளில் இருக்கும் வாட்சர்களுக்கும் நம் அரசாங்க பாரஸ்டுகளில் இருக்கும் வாட்சர்களுக்கும் சம்பளத்தில் வித்தியாசம் இருக்கிறதா ? அப்படியானால் அது நீக்கப்படுமா ?

THE HON SRI M. BHAKTAVATSALAM : ஜமீந்தாரி பாரஸ்டுகள் என்று இப்போது ஒன்றும் இல்லை. அந்த பாரஸ்டுகள் எல்லாம் இப்போது எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகையால் வாட்சர்களின் சம்பள விகிதம் ஒரே மாதிரியாகத்தான் நிர்ணயிக்கப்படும்.

SRI K. SATTANATHA KARAYALAR : இந்த காட்டிலாகா வாட்சர்கள் டெம்பரரியாக ஒர்க் சார்ஜ் என்ற முறையில் இருக்கிறார்களா அல்லது அவ்வப்போது வேலை நிமித்தமாக டெம்பரரியாக நிரந்தர காலத்திற்கு அமர்த்தப்படுகிறார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : 'மெட்ராஸ் பாரஸ்டு கோட்' என்று ஒரு சட்டம் இருக்கிறது. அதிலே ஏழாவது செக்ஷன் பி உள் பிரிவு படி வருஷா வருஷம் வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள். சம்பளம், அதற்குமேல் 'டியர்னஸ் அலவன்ஸ்' கொடுக்கப்படுகிறது. மேலும் ஸ்பெஷல் காம்பன்சேடரி அலவன்ஸ் என்று மாதம் 17 ரூபாய் கொடுக்கப்படுகிறது.

SRI S. M. ANNAMALAI : சார், காடுகளில் வேலை செய்யும் வாட்சர்கள், காடுகளில் உள்ளே புகுந்து தங்கள் உயிரையே பணயம் வைத்து வேலை செய்கிறார்கள். அவர்களுக்கான விதிகள் செய்யும்போது அவர்களை உத்தியோகத்தில் நிரந்தரமாக்குவதைப் பற்றி சர்க்கார் கவனிக்குமா ?

THE HON. SRI M BHAKTAVATSALAM : எவ்வளவு நிரந்தரமாக்க தேவையோ அவ்வளவுக்கு நிரந்தரமாக்கப்படுவார்கள். இதையெல்லாம் அனுசரித்துத்தான் விதிகள் செய்யப்படும்.

*Police Out-post for Jaffarabad*

*93 Q.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to open a Police Out-post at Jaffarabad near Vaniyambadi?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

*Government Basic Training School, Paramakudi*

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் ஸ்ரீ கே. ராமச்சந்திரன் சபையில் இல்லாததால் அவருடைய கேள்வியும் பதிலும் சட்டசபை விவாத வெளியீட்டில் அச்சடிக்கப்படும்.

* 94 Q.—SRI K. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to construct buildings for the Government Basic Training School, Paramakudi in Ramanathapuram district and if so, the details thereof?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir. There is no proposal to construct buildings for the Government Basic Training School, Paramakudi.

*Medical concession to Members of the Legislature*

* 95 Q.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether there is any proposal to extend free medical concession to the Members of the Legislature?

THE HON. SRI M. A. MANICKAVELU : No, Sir.